Government pensioners eligible for pre-medical concessions will be supplied with identity cards in the form prescribed in the G.O. at Government cost for taking treatment in Government medical institutions. என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முறைப்படி கொடுக்கப்படும்.

மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவமனை

* 559 வினு.—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்று துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லே.

திரு. சி. ஆறுமுகம்: தலேவரவர்களே, தேசிய நெடுஞ்சாலேயில் உள்ள மதுராந்தகத்தில் உள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலேயம் இல்லாததால்—அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அதனுல் பல பேர் உயிர் இழக்கும் நிலே ஏற்படுகிறது—அங்கே ஒரு அறுவை சிகிச்சை நிலேயம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலேவரவர்களே, அங்கே அப்படியே ஒரு அறுவை சிகிச்சை நிலேயம் ஏற்படுத்தப்பட்டாலும் ஸ்பெஷலிஸ்ட் சிகிச்சை மதுராந்தகத்தில் வழங்க இயலாது. அதற்காக வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் மதுராந்தகத்திற்குப் பக்கத்திலுள்ள செங்கல்பட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விபத்து வராமல் தடுப்பதற்கு அந்தத் துறையில் உள்ளவர்கள், அந்த ஊரில் உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படி விபத்து ஏற்பட்டாலும் நண்பர் ஆறுமுகம் போன்றவர்கள் செங்கல்பட்டுக்கு அவர்களே அழைத்துக்கொண்டு போய் எல்லா விதமான ஏற்பாடுகளேயும் செய்ய வேண்டும்.

Working Women's Hostels.

* 560 *Q.*—THIRU A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Working Women's Hostels in the State

(*b*) the places where they are located; and

(*c*) the total number of inmates in these Hostels?